

# NURSE-ON-CALL

## 1300 60 60 24

விக்டோரிய அரசாங்கத்தின் ஒரு சுகாதார முன்னெடுப்பான, **NURSE-ON-CALL** என்பது, பதிவுசெய்யப்பட்ட தாதி ஒருவரிடமிருந்து நிபுணத்துவம் வாய்ந்த உடனடிச் சுகாதார ஆலோசனையை வழங்கும், **24 மணி நேரமும் வாரத்தில் 7 நாட்களும் கிடைக்கக்கூடிய** ஒரு தொலைபேசிச் சேவை ஆகும்.

**1300 60 60 24** என்ற எண்ணை, உள்ளூர்த் தொலைபேசி அழைப்பு ஒன்றிற்கான செலவில், விக்டோரியாவில் எந்த இடத்திலிருந்தும் அழைக்கவும்*

*கையடக்கத் தொலைபேசிகளில் இருந்து மேற்கொள்ளப்படும் அழைப்புகளுக்கு அதிகக் கட்டணம் வசூலிக்கப்படலாம்.

விக்டோரிய அரசாங்கத்தின் சார்பாக, 'ஹெல்த் டைரக்ட் ஆஸ்திரேலியா'வால் (Healthdirect Australia) NURSE-ON-CALL சேவை வழங்கப்படுகிறது.

NURSE-ON-CALL

1300 60 60 24

### அணுகக்கூடிய தன்மை

## உங்களுக்கு ஒரு மொழிபெயர்ந்துரைப்பாளர் தேவையா?

**131 450** என்ற எண்ணில் TIS International-ஐ அழைத்து, **NURSE-ON-CALL** உடன் பேசவேண்டுமெனச் சொல்லவும்.

## எனக்கு செவிப்புலன் அல்லது பேச்சுக் குறைபாடு இருந்தால், நான் இந்தச் சேவையை எவ்வாறு பயன்படுத்துவது?

செவிப்புலன் அல்லது பேச்சுக் குறைபாடுள்ள அழைப்பாளர்களுக்கு உதவ, தேசியத் தகவல் பரிமாற்ற சேவை (National Relay Service) உள்ளது. குரல் அஞ்சல் (Voice Relay) வழியாகத் தகவலைப் பரிமாறும் பாவனையாளர்கள், **1800 555 727** என்ற எண்ணை அழைக்க வேண்டும், அதேவேளை தொலைத்தட்டெழுத்துக்கருவியை (Teletypewriter - TTY) பயன்படுத்துவோர் **1800 555 677** என்ற எண்ணை அழைத்து, **NURSE-ON-CALL** உடன் தொடர்புபடுத்துமாறு கேட்கவேண்டும். இணையத்தளத் தகவல் பரிமாற்ற சேவையைப் பயன்படுத்துவோர், தேசியத் தகவல் பரிமாற்றச் சேவை (National Relay Service) வலைத்தளம் வழியாக உதவி இணைப்பை அணுகுகிறார்கள்.

**NURSE-ON-CALL** பற்றிய கூடுதல் தகவலுக்கு, **healthdirect.gov.au/nurse-on-call**-ஐப் பார்வையிடவும்.

விக்டோரிய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது, 1 Treasury Place, Melbourne. © விக்டோரியா மாநிலம், ஆஸ்திரேலியா, சுகாதாரத் துறை, ஆகஸ்ட் 2021.
ஃபின்ஸ்ப்ரி கிரீன் (Finsbury Green) மூலம் அச்சிடப்பட்டது. (DH 2106065).

Tamil I தமிழ்

NURSE-ON-CALL

1300 60 60 24



தொலைபேசி ஊடான உடல்நலத் தகவல் 24 மணிநேரமும் வாரத்தில் 7 நாட்களும் கிடைக்கிறது.

**healthdirect.gov.au/nurse-on-call**

VICTORIA State Government | Department of Health

## உங்களுக்கு நாங்கள் தேவைப்படும்போது உங்களுக்காக நாங்கள் இருப்போம்

**NURSE-ON-CALL** (தொலைபேசி அழைப்பூடான தாதியர் சேவை), நாள் முழுவதுமான, அக்கறையுள்ள, தொழில்முறை உடல்நல ஆலோசனைகளுக்காக, உங்களைப் பதிவுசெய்யப்பட்ட தாதி ஒருவருடன் நேரடியாகத் தொடர்புபடுத்துகிறது. **அவசர சூழ்நிலைகளில், நீங்கள் எப்போதும் 'பூச்சியம்-பூச்சியம்-பூச்சியம்' (000) என்ற எண்ணைத்தான் அழைக்க வேண்டும்;** ஆனால் மற்றைய நேரங்களில், உடல்நல ஆலோசனைக்கான உங்களது சிறந்த தேர்வாக **NURSE-ON-CALL** (தொலைபேசி அழைப்பூடான தாதியர் சேவை) இருக்கலாம்.

உதாரணமாக, பின்வரும் சூழ்நிலைகளில் நீங்கள் தொலைபேசி அழைப்பு விடுக்கலாம்:

- நீங்களோ, நீங்கள் பராமரிக்கும் ஒருவரோ உடல்நிலை சரியில்லாமல் உணர்தல்
- நள்ளிரவு வேளையில், மருத்துவ உதவியை நீங்கள் நாட வேண்டுமா என்று உங்களுக்கு உறுதியாகத் தெரியாமல் இருத்தல்
- நீங்கள் வீட்டிலிருந்தோ, மருத்துவ உதவி பெறும் இடத்திலிருந்தோ வெகு தொலைவில் இருத்தல்
- உங்கள் பகுதியில் உள்ள உடல்நலச் சேவைகள் பற்றிய ஆலோசனை அல்லது தகவல் உங்களுக்குத் தேவைப்படல்.

உடல்நலம் தொடர்பான ஏதேனும் பிரச்சனையைப் பற்றிக் கலந்துரையாட, **NURSE-ON-CALL** (தொலைபேசி அழைப்பூடான தாதியர் சேவை)-ஐ தயங்காமல் அழைக்கவும். விக்டோரியாவிலுள்ள எந்த இடத்திலிருந்தும் **1300 60 60 24** என்ற எண்ணை, உள்ளூர்த் தொலைபேசி அழைப்பு ஒன்றிற்கான செலவில் அழைக்கவும்*.



## நான் உடல்நல ஆலோசனைக்காக அழைக்கும்போது என்ன நடக்கும்?

**படிநிலை 1** - பதிவுசெய்யப்பட்ட தாதி ஒருவர் உங்கள் தொலைபேசி அழைப்புக்குப் பதிலளித்து, சில அடிப்படை விவரங்களைச் சேகரிப்பார்.

**படிநிலை 2** - பின்னர், உங்கள் உடல்நலம் தொடர்பான நோயறிகுறிகள் மற்றும் பிற பிரச்சினைகள் குறித்து உங்களிடம் வரிசையாகச் சில கேள்விகளை அந்தத் தாதி கேட்பார்.

**படிநிலை 3** - அந்தத் தொலைபேசி அழைப்பின் முடிவில், அந்தத் தாதி, உங்களை நீங்களே பராமரித்துக்கொள்ளும் வழிமுறைகளைப் பரிந்துரைக்கலாம், ஒரு பொது மருத்துவரை (ஜி. பி -GP) தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தலாம், அல்லது உங்கள் நிலை மிகவும் மோசமாக இருந்தால், உங்கள் தொலைபேசி அழைப்பை, **'பூச்சியம்-பூச்சியம்-பூச்சியம்' (000)** என்ற எண்ணுக்கு மாற்றலாம்.

உங்கள் நோயறிகுறிகளுக்கான முழுமையான நோயறிதலைத் தாதியர் வழங்குவதில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

மிகவும் புதுப்பிக்கப்பட்ட நிலையில் கிடைக்கக்கூடிய உடல்நலம் பற்றிய தகவல்களையே தாதியர் பயன்படுத்துகிறார்கள். இதனால், நீங்கள் தொலைபேசியில் அழைக்கும் விடயம் தொடர்பான மிக உயர்ந்த, தரமான ஆலோசனைகளை அவர்கள் வழங்குகிறார்கள்.

நிச்சயமாக, நீங்கள் வழங்கும் அனைத்துத் தகவல்களும் இரகசியமாக நிலைத்திருக்கும், அத்துடன் பதிவுகள் முற்றிலும் பாதுகாப்பாக இருக்கும்.

## உடல்நல ஆலோசனைகள், மற்றும் பல

உங்கள் பகுதியில் உள்ள சுகாதாரச் சேவைகளின் விவரங்கள் அல்லது பிற தொலைபேசி உதவி இணைப்புகளின் எண்கள் போன்ற, பிற உடல்நலம் தொடர்பான தகவல்களையும் **NURSE-ON-CALL**-ஆல் உங்களுக்கு வழங்க முடியும்.

பகலிலோ இரவிலோ எந்த நேரத்திலும், தொழில்முறை உடல்நல ஆலோசனை என்பது, வெறுமனே ஒரு தொலைபேசி அழைப்பினூடாகக் கிடைக்கும் என்று அறிந்திருப்பதனூடாக, அனைத்து விக்டோரியவாசிகளுக்கும் **NURSE-ON-CALL** மன நிம்மதியைத் தருகிறது.

*கையடக்கத் தொலைபேசிகளில் இருந்து மேற்கொள்ளப்படும் அழைப்புகளுக்கு அதிகக் கட்டணம் வசூலிக்கப்படலாம்.
விக்டோரிய அரசாங்கத்தின் சார்பாக, 'ஹெல்த் டைரக்ட் ஆஸ்திரேலியா'வால் (Healthdirect Australia) NURSE-ON-CALL சேவை வழங்கப்படுகிறது.



அனைத்து விக்டோரியவாசிகளுக்குமான 24 மணிநேர உடல்நல ஆலோசனை

**NURSE-ON-CALL**

**1300 60 60 24**

## அவசரகால அல்லது உயிருக்கு ஆபத்தான சூழ்நிலைகளில், நீங்கள் எப்போதும் 'பூச்சியம்-பூச்சியம்-பூச்சியம்' (000) என்ற எண்ணை அழைக்க வேண்டும்